අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk


මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/01/09/06/01/05-2020(1) | ඔබේ අංකය / உமது இல. / Your Ref. } | දිනය / திகதி / Date } 2020.11.19

மாகாண கல்வி பணிப்பாளர்கள்,
வலய கல்வி பணிப்பாளர்கள்,
கோட்ட பொறுப்பு பி.க.ப/ உ.க.ப
பரிவேனாபதிகள்,
அதிபர்கள்,

**அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை 2020 மூன்றாம் பாடசாலை தவணைக்காக ஆரம்பித்தல்**

கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பாடசாலைகளில் இரண்டாம் பாடசாலை தவணை 2020.10.05 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டதோடு, சுகாதார அதிகாரிகள் பரிந்துரைக்கு அமைய மூன்றாம் தவணைக்காக பாடசாலைகளை மீண்டும் ஆரம்பித்தலை கீழ்க் காணுமாறு மேற்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

2. அதற்கமைய, மேல் மாகாண மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகார பிரதேசங்கள் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக 2020.11.23 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும். அதன்படி தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான தரங்களில் மாத்திரம் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். ஆரம்ப பிரிவு வகுப்புகளை ஆரம்பிப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

3. பாடசாலை மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளுதல்

அதிபர் தலைமையில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு மற்றும் பாடசாலை சுகாதார மேம்பாட்டு குழுவுடன் கீழ்க்காணும் அலுவலர்களை இணைத்துக்கொண்டு அமைக்கப்படும் பிரதான குழுக்கு பாடசாலையை ஆரம்பித்து நடத்துவதற்காக தேவையான அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்ள அதிகாரமளிக்கப்படுகின்றது. யாதேனும் பிரச்சினையான சந்தர்ப்பமாயின் மேலதிக அறிவுறுத்தல்களை மாகாண/ வலயக் கல்வி பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

- பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி
- பொது சுகாதார பரிசோதகர்
- கிராம சேவகர்
- பொலிஸ்
- பிராந்திய போக்குவரத்து சபை பிரதிநிதி

4. இதன் போது கோவிட் -19 தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தி பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்காக கல்வி அமைச்சினால் இதற்கு முன் வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகள் மற்றும் சுகாதார அமைச்சின் ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

5. கல்வி மற்றும் கல்விசாரா பணிக்குழுவினரை பாடசாலைக்கு அழைத்தல் அதிபரின் விருப்பின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் போது, மாணவர்கள், கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் மேல் மாகாணம் மற்றும் ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகார பிரதேசத்துள் உள்நுழையவோ அதிலிருந்து வெளியேறவோ கூடாது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டுகிறேன்.

6. அவ்வாறு ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளில் இடைநிலை பிரிவு வகுப்புகள் கீழ்க் காணுமாறு தனிநபர் இடைவெளியை பேணுமாறு நடத்தப்படவேண்டும் இதன் போது க.பொ.த (சாதாரண) மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவது பொருத்தமாகும்.

| | |
|---|---|
| a. 15க்கும் குறைவான மாணவர்கள் | தினந்தோறும் வகுப்புகள் நடத்தல் |
| b. 15-30வரையான மாணவர்கள் | வகுப்பின் மாணவர் குழுவை இரண்டாக பிரித்து வாரம் விட்டு வாரம் வகுப்புகளை நடத்துதல் (மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாம் வாரம் என்பதாக அல்லது பொருத்தமான விதத்தில்) |
| c. 30 மாணவர்களுக்கும் அதிகமானது | 15 மாணவர்கள் என்பதாக குழுவாக்கி சமமான தின எண்ணிக்கை ஆகுமாறு வகுப்புகளை நடத்தல் அல்லது பொருத்தமான விதத்தில் |

7. அனைத்து மாணவர்களுக்கும் 'கல்வி வாய்ப்பு கிடைக்குமாறான முறையை உள்ளடக்கிய திட்டத்தை பாடசாலை மட்டத்தில் தயாரித்து வலயக் கல்வி பணிப்பாளர் அனுமதிக்கு முன்வைக்க வேண்டும். அந்த திட்டத்துக்கு அமைய தேவையான மேலதிக வசதிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கைகளை மாகாண கல்வி பணிப்பாளர்கள் கல்வி அமைச்சுக்கு முன்வைத்தல் அவசியமானதாகும்.

8. போக்குவரத்து அமைச்சினால் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சரின் அறிவுரையின் படி போக்குவரத்து அமைச்சின் பிரதேச முகாமையாளரால் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அந்த நடவடிக்கையை பிரதேச போக்குவரத்து சபையின் பிரதிநிதித்துவத்தினூடாக மேற்கொள்ள முடியும்.

மேற்கூறிய செயன்முறைக்கு ஏற்ப பாடசாலைகளை ஆரம்பித்தாலும் அனைத்து மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் விரைவில் வழங்கப்படுமென்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கையொப்பம்: பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி: • மேலதிக செயலாளர் (பாடசாலை நடவடிக்கைகள்) – உ.நட.எ
மாகாண கல்வி செயலாளர் - உ.நட.எ